**சூரியவெவ பிரதேச சபை - 2022**

------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சூரியவெவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சூரியவெவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சூரியவெவ பஸ் தரிப்பிடத்தின் 08 வரிசை கடையறைகளில் 08 கடையறைகளுக்காக 2016 ஜூன் மாதம் முதல் 2022 மே மாதம் வரை சிட்டையிடப்படாத கடையறை வாடகை ரூபா 1,526,400 தொகை மீளாய்வாண்டின் போது வருமானம் ஒன்றென மற்றும் பெற வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை. | கடையறைகளின் உரிமை சட்டரீதியாக கிடைக்கும் வரை சிட்டையிடக் கூடாது என சபை தீர்மானித்திருந்தது என | பெற வேண்டிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 206,250 கணக்கீடு செய்திருக்கவில்லை. | அடுத்த வருடம் இவ்வாறான வழுக்கல் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 2,487,706 இற்கான சம்பள மீளளிப்பு கணக்காய்வு செய்திருக்கவில்லை. | அடுத்த வருடம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | பெற வேண்டிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | உள்ளராட்சி திணைக்களத்தினால் கடந்த ஆண்டு ஒன்றின் போது வழங்கியிருந்த ரூபா 700,000 இற்கான முத்திரைக் கட்டண வருமானம் மீளாய்வாண்டு இறுதி வரை நடைமுறை பொறுப்புக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கிராமிய பாதைகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (2021) கீழ் உடன்படிக்கைகள் மேற்கொண்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத 05 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 10,000,000 இற்கான பெறுமதி மீளாய்வாண்டு இறுதி வரை நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் மற்றும் நிர்மாண வேலைக் கடன்பட்டோர் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்காக மாத்திரம் கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | கிராமிய பாதைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (2021) கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த 16 கிராமிய பாதைச் செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டு இறுதியளவில் நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் ரூபா 913,700 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 463,088 இற்கான சம்பள மீளளிப்பு, வருமான உதவியின் கீழ் கணக்கீடு செய்யாமல் பலவின வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | சபை நிதியத்தில் இருந்து மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்த ரூபா 2,466,547 தொகைக்கான 03 அபிவிருத்தி செயற்திட்டங்களின் பெறுமதி மூலதன வருமானம் மற்றும் மூலதன செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் வருவாய் வருமானம் மற்றும் வருவாய் செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | வருமானங்கள் மற்றும் செலவுகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஐ) | குறைந்த வருமானம் பெறுவோருக்காக நடமாடும் வர்த்தக …….. நிர்மாணிக்கும் நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் ஒப்பந்தவேலை உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த நிர்மாண வேலைக்காக ரூபா 4,549,650 இற்காக நிர்மாண வேலைக் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீளாய்வாண்டு இறுதியளவிலும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | உடன்படிக்கைகள் இரத்துச் செய்யப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட கூடாது. |
| (ஒ) | முன்னைய மற்றும் மீளாய்வாண்டின் போது மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளாமையால் மீளளிப்புச் செய்யப்படாத வீதி விளக்கு பராமரிப்புக் கட்டணம் ரூபா 469,824 தொகை பெற வேண்டிய வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | உடன்படிக்கை மேற்கொண்டிருக்காத வருமானங்கள் பெற வேண்டிய வருமானங்கள் என கணக்கீடு செய்யப்படக் கூடாது. |
| (ஓ) | இரண்டு நிர்மாண வேலைகள் தொடர்பாக மூலதனப்படுத்த வேண்டிய பெறுமதி ரூபா 501,689 மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | சொத்துக்கள் மூலதனப்படுத்துதல் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபை நிதியத்தில் இருந்து மதுனாகல குப்பை செயற்களம் அமைந்துள்ள காணியின் சாக்கடை சுத்திகரித்தல் நிலையம் ஒன்று நிர்மாணிக்கும் நிர்மாண வேலை தொடர்பாக காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட வேண்டிய பெறுமதி ரூபா 350,300 தொகை மிகையாக மற்றும் ரூபா 327,742 தொகை மிகையாக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | சொத்துக்கள் மூலதனப்படுத்தல் மற்றும் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (க) | 1994 இன் 04 ஆம் இலக்க தென் மாகாண முத்திரைக் கட்டணம் திருப்பும் நியதிச் சட்டத்தின் படி சபைக்கு கிடைக்கப்படாத 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்குரிய ரூபா 317,050 இற்கான முத்திரைக் கட்டணம் பெற வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | பெற வேண்டிய வருமானங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 134 (1) | முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை வீதவரி பெறுமதி மதிப்பீடு மேற்கொண்டு அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்யும் கருமம் மேற்கொள்வதற்கு முடியாமல் போனமையால் வீதவரி அறவீடு செய்யப்படவில்லை. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 104 | சேதனப் பசளை செயற்திட்டத்தின் வலைவேலி தயாரிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட குழாய்கள் காணாமல் போனமையால் ஒப்பந்தகாரரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 60,900 இற்கான நட்டம் மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. | ஒப்பந்தக்காரரிடம் பெற வேண்டிய தொகை அறவீடு செய்ய முடியாமல் போனது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 18,326,764 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 17,815,568 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 2,163,000 | 1,273,390 | 3,381,060 | 160,170 | 2,103,000 | 3,309,350 | 1,148,270 | 2,267,840 |
| வாடகை | 36,585,500 | 31,583,026 | 24,767,577 | 12,220,577 | 30,952,500 | 32,807,772 | 18,097,425 | 5,405,392 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,440,600 | 1,427,004 | 886,775 | 886,775 | 1,338,500 | 2,032,178 | 1,144,078 | 1,574,925 |
| ஏனைய வருமானங்கள் | 4,725,200 | 7,955,038 | 4,839,156 | 4,839,156 | 39,550,000 | 50,835,857 | 44,938,132 | 2,101,026 |
| மொத்தம் | 44,914,300 | 42,238,458 | 35,480,963 | 18,106,678 | 73,944,157 | 88,985,157 | 65,327,905 | 11,349,183 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 83 வியாபார அலகுகளில் இருந்து பெற வேண்டிய வியாபார வரி ரூபா 90,230 தொகை அறவீடு செய்வதற்கு பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 152(1) இன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அதிகார சட்டத்திற்கு இணங்க நிலுவை வருவானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முன்னைய ஆண்டுகளில் இருந்து அறவீடு செய்யப்படாமல் காணப்படும் ரூபா 69,940 இற்கான நீர்க் கட்டண வருமானத்தை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிவழிப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 65 கடையறைகளில் இருந்து பெற வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 1,090,997 இற்கான கடையறை வாடகை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அந்த நிலுவைக் கடன் மீதியில் 03 வருடங்களுக்கும் 05 இற்கும் இடைப்பட்ட மற்றும் 05 வருடங்களுக்கு மிகையான நிலுவை மீதி முறையே ரூபா 22,400 மற்றும் ரூபா 489,150 தொகை காணப்பட்டது. | நிலுவை கடை வாடகையில் ரூபா 477,028 தொகை பதிவழிப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்ப்பட்டதுடன், மீதி நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் 11 கடையறைகளுக்காக சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த ரூபா 472,671 இற்கான ஒரே தடவையில் கிடைக்கும் பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 270,991 தொகை பதிவழிப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்ப்பட்டதுடன், மீதி நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 17 வாடகை ஆதனங்களின் வியாபார உரிமையை குத்தகைக்கு கொடுத்ததன் மீது பெற வேண்டிய ரூபா 10,988,000 இற்கான தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒரு பகுதியை பதிவழிப்பதற்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன் மீதித் தொகைக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் மற்றும் நிலுவையை அறவீடு செய்வதற்கும் மற்றும் பாதுகாப்பு பிணையில் இருந்து பதிலீடு செய்யப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 193 வியாபார அலகுகளில் இருந்து 2019 மற்றும் 2022 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திற்காக பெற வேண்டிய அனுமதிப் பத்திரக் கட்டணத்தின் கூட்டுத்தொகை ரூபா 158,500 தொகையினை அறவீடு செய்வதற்காக பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 149 இன் படி அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 50 அறிவித்தல் பலகைகளில் இருந்து பெற வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 719,900 தொகைக்கான அறிவித்தல் பலகைக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஏ) | மாகாண சபை பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் | நிலுவைத் தொகைகளை பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை | நிலுவை வருமானத்தை விரைவாக பெற்றுக் |

| | | |
|---|---|---|
| தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 1,789,744 தொகை மற்றும் ரூபா 927,750 காணப்பட்டது. | எடுக்கப்படும் என. | கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் மாதத்தில் சூரியவெவ கிரிகெட் மைதானத்தில் நடைபெற்ற LPL கிரிகெட் போட்டிக்காக சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த களியாட்ட வரி தொகையினை கணித்து அறவீடு செய்வதற்கு சபை முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் அறவீடு செய்யப்பட்ட ரூபா 1,000,000 இற்கான வைப்புக்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | வைப்பினை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | களியாட்ட வரித் தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சூரியவெவ வாராந்த சந்தையின் பொதுக்கழிவறையை திருத்தவேலை மேற்கொள்ளும் நிர்மாணவேலை ரூபா 4,344,750 இற்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தக்காரரினால் இணங்கியிருந்த வேலைகளின் பெறமதி ரூபா 994,581 தொகை மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு நிர்மாணவேலைகள் கைவிடப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரினால் உடன்படிக்கையின் படி நடவடிக்கை எடுக்காமையால் அவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 216,738 இற்கான செயலாற்றுகை பிணைமுறியை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காசோலை ஒன்றின் மூலம் கிடைத்திருந்த செயலாற்றுகை பிணைமுறியின் பெறுமதி சபையின் கணக்கு ஒன்றிற்கு செலவு வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | செயலாற்றல் பிணைமுறி காசோலைகள் மூலம் பெற்றுக்கொள்ள முடியாததுடன் சரியான செயலாற்றகை பிணை முறி வருனாத்திற்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாடுகள் மீது குறைந்த வருமானம் பெறுவோருக்காக 35 நடமாடும் வியாபார குடில்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 4,549,609 தொகைக்கு ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு சாட்டப்பட்டிருந்ததுடன், | மாதிரிப் பரிசோதனைக்காக ரூபா 129,000 பெறுமதியான நடமாடும் வியாபார குடில்கள் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. | விலைகூறல் பாதுகாப்பு முறி பெறுமதியை சரிசெய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தக்காரரினால் அக் கருமத்தை நிறைவேற்றாமல் கைவிடப்பட்டிருந்தமையால் சபையின் அதிகாரப் பிரதேசத்திற்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த நலனொன்றினை இழந்திருந்தது. ஒப்பந்தக்காரரிடம் பெற்றுக்கொள்ளக் கூடிய விலைகூறல் பாதுகாப்பு முறியின் பெறுமதி ரூபா 97,482 தொகை குறைவாக பெற்றுக் கொண்டிருந்தமையால் சபை நிதியத்திற்கு அத் தொகை நட்டம் ஏற்பட்டிருந்தது. | | |
| (இ) | சபையினால் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகள் வகைப்படுத்தப்படாமல் முறைசாரா விதிமாக போடப்பட்டு இருந்ததுடன், பல வருட காலத்திற்கு முன்னர் இருந்து ஆரம்பிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த சேதனப் பசளை உற்பத்தி செய்யும் குப்பை மீள் சுழற்சி நிகழ்ச்சித் திட்டம் மீளாய்வாண்டின் போதும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகள் கிடைக்கப்பட்ட பின்னர் குப்பை செயற்களம் தயாரிக்கப்பட்டு குப்பை மீள்சுழற்சி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குப்பை மீள்சுழற்சி மேற்கொள்ள வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெனிவெல்ஆரபொல வளவில் காணப்படும் கம்பி வேலி மற்றும் படலை திருத்த வேலைக்காக நிர்மாணவேலை மதிப்பீடு தயாரிக்கும் போது மதிப்பீட்டின் படி சந்தை வளவில் காடுகள் அழிப்பதற்காக குறிப்பிட்ட ரேட் பயன்படுத்தப்படாமையால் ரூபா 271,394 தொகையினால் சபை நிதியத்திற்கு நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் மதிப்பீடுகள் தயாரிக்கும் போது பயன்படுத்தப்படும் ரேட்கள் அந்த ரேட்கள் தயாரிக்கப்படும் முறை தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என. | மிகை கொடுப்பனவு தொடர்பாக நி.பி. 156 இன் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் செயற்படுத்தப்பட்டிருந்த வெனிவெல்ஆர சந்தையின் வேலி மற்றும் படலை திருத்த வேலை, முவன்பெலஸ்ஸ பொது விளையாட்டுத் திடல் அபிவிருத்தி செய்தல் மற்றும் ஜீவனாலி விளையாட்டுத் திடல் வலைவேலி தயாரித்தல் ஆகிய மூன்று நிர்மாண வேலிகள் தொடர்பாக ரூபா 107,409 தொகை குறைவாக தாமதக் கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | 10 சதவீத தடுத்து வைத்தல் பணத்தில் இருந்து கழிக்கப்படும் என. | தாமதக் கட்டணம் சரியாக கணிக்கப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது வர்த்தக கணிப்பீட்டில் இனங்காணப்பட்ட 157 வியாபாரங்களுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காததுடன், அவற்றில் முன்னைய ஆண்டின் போது | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக வியாபாரிகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வியாபாரிகள் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆரம்பிக்கப்பட்டிருந்த 05 வியாபாரங்கள் 2022 ஆண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றிருந்த போதிலும் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அந்த வியாபாரங்கள் தொடர்பாக முறையான வேலைத் திட்டம் ஒன்று சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) மின்சக்தி மற்றும் வலுச் சக்தி அமைச்சுச் செயலாளரின் 2020 ஆகஸ்ட் 17 திகதிய பீஈ/01/01 இலக்கங் கொண்ட கடிதத்தின் 06 ஆவது பந்திக்கு இணங்க புதிய வீதி விளக்குகள் பொருத்தும் போது மின்சார சபையினால் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதிளவில் பொருத்தப்பட்டிருந்த 2886 வீதி விளக்குகளில் 531 இற்கான மாத்திரம் அங்கீகாரம் பெற்றுக் கொண்டிருக்காத வீதி விளக்குகளின் எண்ணிக்கை 2355 தொகையாகும். மேலும் 2017 ஆண்டின் பின்னர் வீதி விளக்குகள் கணிப்பீடு மேற்கொண்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் மீதியான வீதிவிளக்குகளுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் கணிப்பீட்டு அலுவல்கள் விரைவாக நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என. | அறிவுரை கடிதத்தின் படி செயற்படுதல் மற்றும் வீதிவிளக்கு கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 15 காணிகள் 09 மயானங்கள் மற்றும் 02 வாகனங்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்கிக் கொள்வதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணி மற்றும் மயானங்களின் உரிமை உரித்தாக்கித் தரும்படி குறித்த நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டது எனவும், ஒரு வாகனம் உரித்தாக்கப்பட்டது எனவும் மீதி வாகனங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | சொத்துக்களின் சட்ட ரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 செயற்திட்டங்கள், செய்பணிகள் அல்லது மூலதன வேலையில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மதுனாகல குப்பை செயற்களத்தின் காவலறைக்கு அண்மையில் கெமரா முறைமை ஒன்று பொருத்துவதற்கு 2021 திசெம்பர் 31 திகதி களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த பண்டங்களுக்காக 2022 ஜனவரி 22 திகதி ரூபா 355,950 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் காவலறையின் வேலை பூர்த்தி செய்யப்படாமல் மற்றும் மின்சாரம் பெற்றுக்கொள்ளாமல் அந்த சொத்துக்கள் கணக்காய்வுத் திகதி வரை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | மதுனாகல குப்பை செயற்களத்திற்காக புதிய மின்இணைப்பு பெற்றுக்கொள்ள முடியாமையால் CCTV பொருத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என. | சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிகாக தயாரிக்கப்பட்டு இருந்த பாதீட்டில் சபை நிதியத்தில் இருந்து செயற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த ரூபா 23,250,000 தொகை 10 அபிவிருத்தி செயற்திட்டங்களில் ரூபா 300,000 தொகைக்காக பகல்பாதுகாப்பு நிலையத்திற்கு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான செயற்திட்டம் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது. | நிர்மாணவேலை பண்டங்களின் விலைகள் அதிகரிப்பதனால் ஏனைய அபிவிருத்தி செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாமையினால் என. | பாதீடு செய்யப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். |

### 3.6 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 5.6.1 இன் படி நடவடிக்கை எடுக்காமல் கூறுவிலைகள் அழைக்கப்பட் நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த விவரக் குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு சபையின் பெறுகை தேவைப்பாட்டினை தீர்மானித்து கூட்டுப்பெறுமதி ரூபா 1,242,950 தொகைக்கான 27 CCTV கெமராக்கள் 2022 ஆகஸ்ட் 31 திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் சபை அலுவலக வளாகத்தில் CCTV கெமரா முறைமை பொருத்துவதற்காக பெற்றிருந்த விவரக் குறிப்பினை மதிப்பாய்வு செய்தல் முக்கியயமான விவரக் குறிப்பு விடயங்கள் மதிப்பாய்விற்கு ஆளாக்கப்பட்டிருக்கவில்லை. | கூறுவிலைகள் அழைக்கும் போது குறிப்பிட்ட இடங்களை குறிப்பிட்டு கெமரா இலக்கம் மற்றும் கேபல்களின் நீளத்துடன் Indoor, Outdoor, night vision குறிப்பிட்டு விவரக் குறிப்புகள் குறிப்பிடப்பட்டது என. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.7 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தென் மாகாண அபிவிருத்தித் திட்டம் - 2021 மாகாண குறித்தொதுக்கிய மானியத்தின் கீழ் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 04 பாதைகள் 2700 மீற்றர் நீளத்திற்கு நீர்க்குழாய்கள் விரிப்பதற்காக ரூபா 1,982,292 தொகை தேசிய நீர்வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு 2022 ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன், நீர்க் குழாய்கள் விரித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த தூரம் 2101 | எதிர்காலத்தில் சபையினால் நிறைவேற்றப்படும் செயற்திட்டங்கள் ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பட்டு நிறைவேற்றும் போது மிகவும் கவனத்துடன் செயற்பட நடவடிக்கை எடுக்கப்படும் என. | மிகைக் கொடுப்பனவு தொடர்பாக நி.பி. 156 இன் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீற்றர்களாக காணப்பட்டமையால் ரூபா 439 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு தேவையான சலுகைகள் வழங்குவதற்காக உள்ளூராட்சித் திணைக்களத்திடம் இருந்து கிடைத்திருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தி 2021 ஆண்டின் போது ரூபா 302,072 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 610 மி.மீற்றர் அளவிலான 22 ஹியும் குழாய்களில் 07 எதிர்பார்த்த கருமத்திற்காக பயன்படுத்தப்படாமல் மீளாய்வாண்டு இறுதி வரை சபை அலுவலக வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தது. | பொதுமக்களின் கோரிக்கை மற்றும் அந்தக் குழாய்கள் பொருத்துவதற்கு தகைமையான இடம் பரிசோதனை செய்யப்பட்டு விரைவாக வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கொள்வனவு செய்யப்பட்ட ஹியும் குழாய்கள் எதிர்பார்க்கப்பட்ட கருமங்களுக்காக பயன்படுத்த வேண்டும். |

### 3.8 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு (பொ.நி.சு.25.˙.2014 ஊழியர்கள் உட்பட) சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி முறையே 59 மற்றும் 73 ஆகக் காணப்பட்டமையால் 20 மிகைகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகைகளுக்கான அங்கீகாரம் வழங்கும் படி உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | மிகைகளை முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |